2-ஆவது மனைவி கொன்று புதைப்பு காவலரிடம் தீவிர விசாரணை

ஆலங்குடி, அக்.13: புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி அருகே 2-ஆவது மனைவியை கொலை செய்து தோட்டத்தில் புதைத்ததாக காவலரிடம் போலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.



மவுனிகா

கறம்பக்குடி அருகேயுள்ள பிலாவிடுதியைச் சேர்ந்தவர் ஏ.பிரபாகரன் (39). இவர், அரியலூர் மாவட்டம் வெங்கனூர் காவல் நிலையத்தில் காவலராகப் பணிபுரிந்து வருகிறார். இவருக்குத் திருமணமாகி மனைவியும், 2 மகள்களும் உள்ளனர். இதனிடையே, துவார் கிராமத்தைச் சேர்ந்த மவுனிகா (24) என்பவரை 2-ஆவது திருமணம் செய்துள்ளார். இவர்களுக்கு ஒரு பெண் குழந்தையும் பிறந்துள்ளது. மவுனிகாவை பிலாவிடுதியில் உள்ள தனது வீட்டுக்கு அழைத்துச் செல்லாமல், துவாரிலேயே அவரது பெற்றோருடன் தங்க வைத்திருந்த பிரபாகரன், அடிக்கடி அவரை அரியலூருக்கு அழைத்துச் சென்று வந்ததாகவும் கூறப்படுகிறது. இந்த நிலையில், கடந்த அக். 7-ஆம் தேதி மவுனிகாவை பிரபாகரன் அழைத்துச் சென்றதாகக் கூறப்படும் நிலையில், மறுநாள் முதல் மவுனிகாவைத் தொடர்பு கொள்ள முடியவில்லையாம். இதுகுறித்து மழையூர் காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகாரின் பேரில், மவுனிகாவை காணவில்லை என வழக்குப் பதிவு செய்து போலீஸார் விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

இதில், பிரபாகரனுக்குச் சொந்தமான மானியவயல் பகுதியில் உள்ள தோட்டத்தில் மவுனிகாவின் உடல் புதைக்கப்பட்டிருப்பது செவ்வாய்க்கிழமை மாலை தெரியவந்தது.

இதற்கிடையில், மவுனிகா காணாமல் போனது குறித்து தனக்கு எந்தத் தகவலும் தெரியாது என்று கூறிவந்த காவலர் பிரபாகரன், செவ்வாய்க்கிழமை திடீர் நெஞ்சுவலி ஏற்பட்டதாகக் கூறி புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

விசாரணையில், தம்பதிக்கு இடையே ஏற்பட்ட குடும்பத் தகராறில், மவுனிகாவை கொலை செய்து, தனது தோட்டத்தில் புதைத்துவிட்டு, பிரபாகரன் நாடகமாடியது தெரியவந்துள்ளது. தொடர்ந்து பிரபாகரனிடம் போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

ஓய்வூதியரிடம் ரூ.28.50 லட்சம் மோசடி: 3 பேர் கைது

திருநெல்வேலி, அக். 13: திருநெல்வேலியைச் சேர்ந்த ஓய்வூதியரிடம் இணைய வழியில் ரூ.28.50 லட்சம் மோசடி செய்ததாக 3 பேரை போலீஸார் திங்கள்கிழமை கைது செய்தனர்.

தச்சநல்லூர் அருகேயுள்ள சேந்திமங்கலத்தைச் சேர்ந்தவர் அனந்தப்பன் (61). தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் டிக்கெட் பரிசோதகராக பணியாற்றி ஓய்வுபெற்றவர். இவரது கைப்பேசி எண்ணுக்கு கடந்த 6-ஆம் தேதி மர்ம நபர் தொடர்பு கொண்டு, மும்பையில் உள்ள என்.ஐ.ஏ. காவல் துறையைச் சேர்ந்தவர் எனக் கூறி மிரட்டியுள்ளார். அடுத்தடுத்த நாள்களில், தீவிரவாதிகளுடன் உங்களது வங்கிக் கணக்கில் இருந்து பரிவர்த்தனை நடந்துள்ளதாக கூறியதோடு, டிஜிட்டல் கைது செய்வதாக மிரட்டியுள்ளனர். பின்னர் இணையவழியில் ரூ.28 லட்சத்து 50 ஆயிரம் பெற்று ஏமாற்றியுள்ளனர்.

இதுகுறித்த புகாரின்பேரில் திருநெல்வேலி மாநகர சைபர் கிரைம் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். மோசடியில் ஈடுபட்டது கேரள மாநிலத்தைச் சேர்ந்த 3 பேர் கும்பல் என்பது தெரியவந்தது. இதையடுத்து அங்கு தனிப்படையினர் சென்று எர்ணாகுளம் மாவட்டம், நெடுவெளிகாட்டைச் சேர்ந்த ரவிக்குமார் (52), விஸ்வபுரத்தை சேர்ந்த தினேஷ் (52), கண்ணூர் மாவட்டம், எடக்காடு பகுதியை சேர்ந்த அப்துல் சமது (50) ஆகியோரை கைது செய்தனர்.

சேரன்மகாதேவி அருகே காவலரை வெட்ட முயன்ற ரவுடி கைது

சேரன்மகாதேவி, அக்.13: திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி அருகே ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது, காவலரை அரிவாளால் வெட்ட முயன்ற ரவுடியை போலீஸார் கைது செய்தனர்.

சேரன்மகாதேவி காவல் சரகத்துக்குள்பட்ட கூனியூர் சக்திகுளம் பகுதியில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் முருகன் தலைமையில் போலீஸார் திங்கள்கிழமை ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அங்குள்ள கோயில் அருகில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தபோது, அப்பகுதியில் பல குற்ற வழக்குகளில் தொடர்புடைய சக்திகுளம் தெற்குத் தெருவைச் சேர்ந்த ஆறுமுகம் மகன் சக்தி (29) என்பவர் சந்தேகிக்கும் வகையில் நின்று கொண்டிருந்தாராம். அவரிடம் போலீஸார் விசாரித்தபோது, சக்தி தான் மறைத்து வைத்திருந்த அரிவாளால் போலீஸாரை வெட்ட முயன்றதாகக் கூறப்படுகிறது. சுதாரித்துக் கொண்ட போலீஸார், அவரைச் சுற்றிவளைத்து பிடித்து காவல் நிலையத்துக்கு அழைத்து வந்தனர்.

இதுகுறித்து சேரன்மகாதேவி போலீஸார் வழக்குப் பதிந்து சக்தியை கைது செய்தனர்.

'ஜெம்' வீரமணி 3-ஆவது வழக்கில் கைது: மேலும் இரு காவல் அதிகாரிகளிடம் விசாரணை

சென்னை, அக். 13: சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த விவகாரத்தில் ஜெம் வீரமணி மூன்றாவது வழக்கில் கைது செய்யப்பட்டார். இந்த விவகாரத்தில் மேலும் இரு காவல் அதிகாரிகளிடம் சிறப்பு புலனாய்வுக் குழுவினர் விசாரணை செய்தனர்.

சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்ததாக 'ஜெம்' கிரானைட் நிறுவன உரிமையாளர் வீரமணி மற்றும் அவரது உதவியாளர் சாந்தி, அவர் கணவர் மகேந்திர சிம்ஹன், கணேசன், கார் ஓட்டுநர்கள் லாசர், பார்த்திபன், பாபு ஆகியோர் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டனர்.

இந்த விவகாரம் குறித்து சென்னை மத்திய குற்றப்பிரிவு கூடுதல் ஆணையர் தேன்மொழி தலைமையிலான சிறப்பு புலனாய்வுக் குழுவினர் விசாரணை செய்கின்றனர். ஜெம் வீரமணி மீது இதுவரை 10 சிறுமிகள் புகார் அளித்துள்ளனர். இது வரை 7 வழக்குகள் வீரமணி மீது பதிவு செய்யப்பட்டுள்ளன.

வீரமணியிடம் பணம் பறிப்பு: வீரமணி, சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்தது குறித்து 2025 அக்டோபரில் சென்னை காவல் துறையில் விடியோ ஆதாரத்துடன்புகார்செய்யப்பட்டது. ஆனால், புகாரின்பேரில் காவல் துறை வழக்குப் பதிவு செய்து விட்டு, விடியோவில் இருப்பவர்கள் யாரென்ற தெரியவில்லை என்று வழக்கை முடித்து வைக்க முயன்றது. ஆனால், போக்ஸோ நீதிமன்றம், அதை நிராகரித்து விசாரணைக்கு உத்தரவிட்டது.

உயர் அதிகாரிகளிடம் விசாரணை: இந்த விவகாரத்தில் மேலும் துப்பு துலக்கும் வகையிலும், வழக்கை முடித்து வைக்க முயன்ற புகார் தொடர்பாகவும் காவல் துறை உயர் அதிகாரிகளிடம் சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை நடத்தி வருகிறது. இதன் ஒருபகுதியாக அப்போது சென்னை பெருநகர காவல் துறை ஆணையராக இருந்த ஏடிஜிபி ஏ.அருண், கூடுதல் காவல் ஆணையராக இருந்த ஐஜி கண்ணன் ஆகியோரிடம் சிறப்பு புலனாய்வுக் குழு 3 மணி நேரம் விசாரணை செய்தது.

இதன் தொடர்ச்சியாக அப்போது மத்திய குற்றப்பிரிவு கூடுதல் ஆணையராக இருந்த ஏ.ராதிகா, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்பு பிரிவு துணை ஆணையராக இருந்த வனிதா ஆகியோரிடம் விசாரணை நடத்தினர்.

3-ஆவது வழக்கில் கைது: இதற்கிடையே, ஜெம் வீரமணி மீது ஏற்கெனவே 2 வழக்குகளில் கைது நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில், 3-ஆவது வழக்கில் செவ்வாய்க்கிழமை கைது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சிறப்பு புலனாய்வுக் குழு, தனது அடுத்தகட்ட விசாரணை அறிக்கையை அக்.27-ஆம் தேதி போக்ஸோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய திட்டமிட்டுள்ளது.

வியாபாரியிடம் இணைய வழியில் ரூ.4.98 லட்சம் மோசடி

திருச்சி, அக். 13: திருச்சியில் வியாபாரியிடம் இணையவழியில் ரூ.4.98 லட்சம் மோசடி செய்த சம்பவம் தொடர்பாக போலீஸார் செவ்வாய்க்கிழமை வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

திருச்சி வயலூர் சாலையைச் சேர்ந்தவர் ஜோ பிராங்க் சுரேந்திரன் (46). எம்பிஏ படித்து வரும் இவர், சொந்தமாக பாக்குமட்டை தட்டு உற்பத்தி செய்யும் கூடம் நடத்தி வருகிறார். இவர், கடந்த 9-ஆம் தேதி வயலூர் சாலையில் உள்ள தனியார் வங்கி ஏடிஎம் மையத்தில் பணம் எடுத்துள்ளார்.

அந்தப் பணப்பரிவர்த்தனைக்காக சிறிதுநேரம் கழித்து, அவரது கைப்பேசியின் கட்செவி அஞ்சலுக்கு குறுஞ்செய்தி வந்துள்ளது. அதில், ஏடிஎம் இயந்திரத்திலிருந்து பணம் எடுத்துள்ளீர்களா? என்ற கேள்வி இடம் பெற்றிருந்தது. இதை படித்துப்பார்த்த அவர், ஆம் என்று பதிலை பதிவு செய்து மீண்டும் அதே எண்ணுக்கு அனுப்பியுள்ளார். இந்த நடவடிக்கை முடிந்த விநாடியே அவரது வங்கிக் கணக்கிலிருந்து ரூ.4 லட்சத்து 98 ஆயிரத்து 833 எடுக்கப்பட்டதாக தகவல் வந்துள்ளது. இதனால், அதிர்ச்சியடைந்தவர் தனது வங்கி கணக்கு விவரங்களை மீண்டும் சரிபார்த்தபோது, பணம் எடுக்கப்பட்டது உறுதியானது.

சம்பவம் தொடர்பாக வங்கி நிர்வாகத்திடம் அவர் தகவல் தெரிவித்தார். வங்கி அலுவலர்கள் அளித்த அறிவுரையின்படி, உடனடியாக இணைய வழி மோசடி தொடர்பாக இணையத்திலேயே புகார் அளித்தார். இணையத்தில் பெறப்பட்ட இந்தப் புகார், திருச்சி சைபர் குற்றப் பிரிவு போலீஸாருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. புகாரைப் பெற்ற போலீஸார் செவ்வாய்க்கிழமை வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

APTUS

ஆப்டஸ் வேல்யூ ஹவுஸிங் பைனான்ஸ் இந்தியா லிட்
88, தோஷி டவர்ஸ், 205, பூந்தமல்லி நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை - 600010. போன்: 044-4563 0003.

சுவாதீன அறிவிப்பு பிற்சேர்க்கை IV (பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 விதி8 (1)ன் கீழ்)

இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர் ஆப்டஸ் வேல்யூ ஹவுசிங் பைனான்ஸ் இந்தியா லிட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002-கீழும், பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் 2002-ன் பிரிவு 13(2) விதி 3 உடன்படிக்கை-யின்படியும் தனக்கு வழங்கப்பெற்ற அதிகாரத்தின்படி, கடனாளிகளை கேட்பு அறிவிப்பு மூலம் அழைத்து அவ்வறிப்பில் உள்ள கடன் தொகையை மேற்சொன்ன கேட்பு அறிவிப்பை பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்த கோரப்பட்டது. கடனாளிகள் அத்தொகையை திருப்பிச் செலுத்த தவறியமையால், இந்த அறிவிப்பு மூலம் கடனாளிகள் மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கையொப்பமிட்ட நபர், இதில் குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13(4), மேற்சொன்ன விதிகளில் விதி 8 உடன்படிக்கையின்படி தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் **"அடையாள சுவாதீனம்"** எடுத்துள்ளார்.

கடனாளிகள்/உடன் கடனாளிகள் மற்றும் கடன் கணக்கு எண் / அடமான சொத்து குறித்த விவரம்	நிலுவைத் தொகை(ரூ.)
புஷ்பா & ஐயப்பன், கடன் எண்: ADHARA0190813, சொத்து குறித்த விவரம் : திருப்பூர் பதிவு மாவட்டம், தொட்டிபாளையம் சார்-பதிவக எல்லை, திருப்பூர் தாலுகா (வட்டம்), முதலிபாளையம் கிராமம் மஜரா செம்மாண்டம்பாளையம் நத்தத்தில், நத்தம் சர்வே எண் 486, புதிய சர்வே எண் 595/12, கிராம தாசில்தாரால் வழங்கப்பட்ட நத்தம் பட்டா எண் 82-ல் உள்ள 703 சதுர அடி (65.31 சதுர மீட்டர்) விஸ்தீரணமுள்ள நிலம், இம்மனையில் 21 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட ஏசிசி (ACC) கட்டிடம், மின் இணைப்புகள் மற்றும் இச்சொத்துடன் இணைந்த சகல உரிமைகளுடன் கூடிய கதவு எண் 1/82, தமிழ்நாடு மின்வாரிய (TNEB) மின் இணைப்பு எண் 452 மற்றும் பிறவும் அடங்கிய, பொதுப் பாதை உரிமை மற்றும் லேஅவுட் சாலை உரிமைகளுடன் கூடிய அட்டவணையில் கண்ட மனை முழுமைக்கும் எல்லைகள்: வடக்கே கிழக்கு-மேற்கு சந்து, தெற்கே பழனிசாமிக்கு சொந்தமான புதிய சர்வே எண் 595/18, கிழக்கே சந்து சாலை மற்றும் மேற்கே கருப்பன் சொத்து.	**கேட்பு அறிவிப்பு தேதி :** 29.05.2026 **29.07.2026 அன்று ரூ.10,49,782/-** **(ரூபாய் பத்து லட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து எழுநூற்று எண்பத்திரண்டு மட்டும்)**

குறிப்பாக கடனாளிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இச்சொத்துடன் எந்தவொரு வில்லங்கமும் ஏற்படுத்த வேண்டாம் என்று எச்சரிக்கப்படுவதுடன், இச்சொத்தின் மீது ஏற்படுத்தும் எவ்விதமான வில்லங்கமும், ஆப்டஸ் வேல்யூ ஹவுஸிங் பைனான்ஸ் இந்தியா லிட்-க்கு செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் மேற்கொண்டு வரும் வட்டி ஆகியவற்றிற்கு கட்டுப்பட்டது. பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கு, கிடைக்கும் நேரத்தைப் பொறுத்தவரை, சட்டத்தின் பிரிவு 13ன் துணைப்பிரிவு (8)-ன் விதிகளுக்கு கடன் வாங்குபவரின் கவனம் அழைக்கப்படுகிறது.

தேதி : 09.10.2026
இடம் : முதலிப்பாளையம்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஆப்டஸ் வேல்யூ ஹவுசிங் பைனான்ஸ் இந்தியா லிட்

பழைய 5 ரூபாய் தாளுக்கு அதிக பணம் தருவதாக மோசடி: ரூ.3.50 லட்சத்தை இழந்த வியாபாரி தற்கொலை

கிருஷ்ணகிரி, அக். 13: ராயக்கோட்டை அருகே ஆன்லைன் மூலம் பழைய 5 ரூபாய் தாளுக்கு அதிக பணம் கிடைக்கும் என்ற ஆசையில் ரூ.3.50 லட்சத்தை இழந்த சிறு வியாபாரி மனமுடைந்து தூக்கிட்டு செவ்வாய்க்கிழமை தற்கொலை செய்துகொண்டார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ராயக்கோட்டையை அடுத்த கல்லுகன் கோட்டை கிராமத்தைச் சேர்ந்தவர் கோவிந்தராஜ் (46), சிறு வியாபாரி. இவரது மனைவி சித்ரா (37). இவர் அதே பகுதியில் மீன்கடை நடத்தி வருகிறார். இந்த நிலையில், கோவிந்தராஜுவை இன்ஸ்டாகிராம் செயலி மூலம் தொடர்பு கொண்ட மர்ம நபர், பழைய 5 ரூபாய் தாள் ஒன்றுக்கு ரூ.56 ஆயிரம் பணம் தருவதாகக் கூறியுள்ளார். ஆனால், இதற்கு வரி செலுத்த வேண்டும் என்று கூறியுள்ளார். இதை நம்பிய கோவிந்தராஜ், அந்த மர்ம நபர் கூறிய வங்கிக் கணக்கில் பல்வேறு தவணைகளாக ரூ.3.50 லட்சத்தை இணையதளப் பரிவர்த்தனை மூலம் அனுப்பியுள்ளார்.

அதன்பிறகு அந்த மர்ம நபரை தொடர்பு கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அந்த நபரின் கைப்பேசியும் அணைத்து வைக்கப்பட்டிருந்தது. இதனால், மனமுடைந்த கோவிந்தராஜ், மனைவி நடத்தும் மீன் கடையில் செவ்வாய்க்கிழமை தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இதுகுறித்து, தகவலறிந்து வந்த ராயக்கோட்டை போலீஸார், கோவிந்தராஜுவின் சடலத்தை மீட்டு கூராய்வுக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கொலை செய்து குப்பைமேட்டில் புதைக்கப்பட்ட செவிலியர் சடலம் மீட்பு

அரூர், அக். 13: கடத்தூரில் கொலை செய்து குப்பைமேட்டில் புதைக்கப்பட்ட செவிலியர் சடலத்தை போலீஸார் மீட்டனர். தருமபுரி மாவட்டம், கடத்தூர் 4 -ஆவது வார்டு குடியிருப்பு பகுதியையொட்டி உள்ள குப்பை மேட்டில் இருந்து கடும் துர்நாற்றம் வீசியது. இதுகுறித்து கிராம நிர்வாக அலுவலர் மா.முரளி அளித்த புகாரின் பேரில் போலீஸார் அந்தப் பகுதியில் சோதனை நடத்தினர்.

இதில், குப்பை மேட்டில் பெண் சடலம் புதைக்கப்பட்டு அழுகிய நிலையில் இருப்பது தெரியவந்தது. இதுகுறித்து, நடத்திய விசாரணையில், சடலமாக கிடந்த பெண், கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பாப்பாத்தி (47) என்பதும், அவர் செவிலியராகப் பணியாற்றி வந்ததும் தெரியவந்தது.

இவரும், மணியம்பாடி கிராமத்தைச் சேர்ந்த மாது மகன் வெங்கடாசலம் (42) என்பவரும் தொடர்பில் இருந்துள்ளனர். இதையடுத்து, பாப்பாத்தியை அழைத்துவந்த வெங்கடாசலம், கடத்தூரில் வாடகைக்கு வீடு எடுத்து குடியிருந்துள்ளார். அப்போது, இருவருக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் பாப்பாத்தியை அவர் கொலை செய்து, சடலத்தை குப்பை மேட்டில் புதைத்தது விசாரணையில் தெரியவந்துள்ளது. இதையடுத்து, வெங்கடாசலத்தை கடத்தூர் போலீஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

MANAPPURAM FINANCE LTD.

CIN: L65910KL1992PLC006623, Registered Office: W - 4/ 638A, Manappuram House, P.o. Valapad, Thrissur - 680 567, Kerala, India

தங்க நகைகள் பொது ஏலம்

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கிழ்க்கண்ட கிளைகளில் 16.11.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பின்றி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

கோயம்புத்தூர், 6வது தெரு காந்திபுரம், 0100020700429341, 9595, 9598, 9599, 9628, 0100020730017389, 7403, 7419, 7451, 7481, 7495, ஆலந்துறை கோயம்புத்தூர், 0117480700036973, 6975, 6983, 6993, 7014, 0117480730009618, 1465, 1593, 1594, 1599, 1609, 1615, 1622, 1626, 0104, அண்ணூர் கோயம்புத்தூர், 0121550700038254, 8272, 8276, 8304, 8331, 8339, 8342, 8345, 8363, 8365, 8380, 0121550730021190, 1208, 1216, 1237, 1245, 0186, 0188, அவினாசி, 0102530700760035, 0274, 0279, 0284, 0290, 0294, 0298, 0302, 0312, 0316, 0318, 0320, 0323, 0102530730017259, 7290, 7292, 7293, 7298, 7300, 7310, 7331, 7353, 0220, 0224, 0227, அவினாசி பேருந்து நிலையம் , 0132500700023858, 3942, 3958, 3960, 3963, 3967, 3971, 3980, 4006, 0132500730016436, 6437, 6535, 6557, 6558, 6562, 6567, 6581, 6582, 6583, 6587, 6594, செட்டிப்பாளையம் கோயம்புத்தூர், 0120790700043416, 3424, 3481, 3524, 4268, 4483, 4504, 4510, 4522, 4526, 4542, 0120790730020874, 1158, 1160, 1186, 1187, 1222, 1223, 1232, 1240, 1257, 0153, சின்னமயபாளையம், 0133400700021856, 1918, 1940, 2620, 2629, 2649, 0133400730030913, 3554, 3585, 3592, 3613, 3691, 3777, 3782, 3783, 3784, 3788, 3790, 3794, 3811, 3824, 3853, சிந்தாமணிபுதூர், 0129730700022585, 2654, 2655, 2660, 2666, 2667, 2697, 2716, 2719, 0129730730018158, ஈச்சனேரி கோயம்புத்தூர், 0116050700051454, 2432, 2476, 2481, 2507, 2511, 2523, 2545, 2551, 2554, 2585, 0116050730014542, 8202, 8318, 8428, 8429, 8432, 8433, 8476, 8488, 8493, 8494, 8504, 8505, 0161, 0163, கணபதி ராஜேந்திர பிரசாத் தெரு, 0101980700780545, 0565, 0566, 0569, 0583, 0584, 0587, 0599, 0101980730016411, 6412, 6413, 6430, 6435, 6444, 6455, காந்தி பார்க், 0108880700066696, 7366, 7480, 7495, 7497, 7507, 7519, 7520, 7528, 7535, 7538, 7547, 7554, 7558, 7583, 7584, 7585, 0108880730026175, 6269, 6270, 6312, 6313, 6316, 6330, 6331, 6332, 6387, 6394, காந்திபுரம் கோயம்புத்தூர், 0124590700035939, 5999, 6050, 6057, 6076, 6078, 6122, 6131, 0124590730018729, 8864, 8867, 8879, 8881, 8890, 8897, 8907, 8919, கோல்டுவின் பஸ் நிறுத்தம் கோயம்புத்தூர், 0128460700021120, 1632, 1635, 1656, 1662, 1664, 1671, 1685, 1686, 1689, 1695, 1706, 1708, 1712, 0128460730016060, 6156, 6185, 6202, 6203, 0093, கமராஜர் ரோடு, 0111770700035030, 5480, 5633, 5647, 5655, 5656, 5688, 0111770730037132, 7133, 7271, 7285, 7300, 7338, 7339, 7340, 7344, 7355, 7375, காரமடை கோயம்புத்தூர், 0127620700027820, 8534, 8727, 8734, 8735, 8736, 8751, 8759, 8769, 8770, 8773, 8779, 8780, 8783, 8799, 8810, 8813, 0127620730028057, 0564, 0667, 0668, 0679, 0680, 0681, 0682, 0683, 0685, 0692, 0699, காரமடை ரோடு மேட்டுப்பாளையம், 0101250700779094, 9203, 9220, 9230, 9234, 9255, 9260, 0101250730026340, 6419, 6420, 6421, 6442, 6445, 6449, 6453, 6454, 6455, 6476, கவுண்டம்பாளையம், 0115040700030508, 0509, 1305, 1308, 1310, 1321, 1331, 1334, 1345, 1360, 1374, 1383, 0115040730013966, 4036, கிணத்துக்கடவு, 0111740700029374, 0056, 0201, 0203, 0206, 0111740730006460, 6461, 6563, 6566, 6577, 6585, கோவில்மேடு கோயம்புத்தூர், 0121810700026527, 6664, 6676, 6693, 6706, 6721, 0121810730022583, 2693, 2899, குனியமுத்தூர், 0109650700076908, 7981, 8003, 8007, 8010, 8011, 8062, 8079, 8102, 0109650730020463, 0464, 2811, 2837, 2921, 2923, 2942, 2944, 2962, 2977, 2984, மேட்டுப்பாளையம், 0125100700037576, 8311, 8350, 8360, 8371, 8387, 8394, 8395, 8396, 8399, 8400, 8403, 8407, 8408, 8425, 8428, 8428, 8432, 8433, 0125100730038073, 8074, 8075, 8077, 8137, 0181, 0226, 0227, 0258, 0259, 0271, 0272, 0273, 0301, நரசிம்மபாளையம், 0118060700036403, 6465, 7263, 7384, 7390, 7409, 7451, 7470, 7524, 7547, 7550, 7558, 7559, 7565, 7575, 7582, 7613, 7619, 7630, 7644, 7646, 7648, 0118060730018659, 8713, 8760, 8767, 8780, 8783, 8796, 8803, 8839, 8851, 0302, ஒப்பணக்கார கோயம்புத்தூர், 0100520700085160, 5166, 5174, 5178, 5198, 5208, 5408, 0051, பி என் புதூர் கோயம்புத்தூர், 0117310700032382, 2545, 2551, 2558, 2567, 2577, 2584, 2585, 0117310730019425, 1762, 1795, 1824, 1866, 1908, 1927, பல்லடம், 0101480700084472, 5419, 5492, 5495, 5522, 5524, 5535, 5548, 5594, 5604, 0101480730027224, 7225, 7263, 7312, 7313, 7326, 7343, பீளமேடு கோயம்புத்தூர், 0127800700029112, 0071, 0331, 0341, 0127800730019975, 9986, 9995, 0012, 0037, பெரியநாயக்கன்பாளையம், 0103790700057997, 8810, 8812, 8814, 8819, 8824, 8827, 8828, 8829, 8834, 8859, 8877, 8891, 8894, 8902, 8910, 8917, 0103790730027851, 0055, 0122, 0198, 0199, 0203, 0206, 0207, 0232, 0157, 0162, போத்தனூர், 0126720700043370, 3380, 3400, 0126720730021406, 1460, 1462, 1463, 1506, 1507, 0124, பொள்ளாச்சி, 0100970700815832, 7342, 7350, 7386, 7393, 7412, 7503, 0100970730024780, 5132, 5149, 5221, 5226, புளியக்குளம் கோயம்புத்தூர், 0128600700032975, 2976, 2987, 0128600730016163, 6198, 6231, 6308, 6314, 6337, ராஜா தெரு, 0109400700047067, 7080, 0109400730014851, 4913, 4942, ராமநாதபுரம், 0100620700101579, 1598, 1609, 1629, 0100620730025476, 5477, 5484, 5490, 5495, ரத்தினபுரி கோயம்புத்தூர், 0114070700044957, 4990, 5715, 5720, 5723, 5725, 5747, 5760, 5762, 0114070730017036, 7151, 7167, 7190, சாய்பாபா காலனி, 0102300700051870, 1891, 1922, 1976, 1980, 1981, 1985, 1993, 2000, 2006, 0102300730022937, 2953, சமலபுரம், 0126850700037350, 7352, 7370, 7393, 7394, 7411, 7412, 0126850730026667, 6697, 6714, 6720, 6725, 6747, 6751, 6782, 6783, 6787, 6795, சாரதா மில் ரோடு சுந்தராபுரம், 0108570700067055, 7064, 8082, 8087, 8101, 8103, 8125, 8127, 8146, 8149, 8154, 8155, 8166, 8170, 0108570730014531, 4540, 4554, 4578, 4591, 4614, 4617, 4619, சரவணம்பட்டி மேட்டுப்பாளையம், 0125300700029636, 0535, 0547, 0578, 0579, 0587, 0588, 0589, 0595, 0597, 0598, 0599, 0637, 0638, 0640, 0646, 0665, 0672, 0679, 0125300730017679, 7717, 7739, 7814, 7838, 7912, 7941, 7982, 8000, 8002, 8018, 8036, 0170, 0187, 0189, சித்தபுதூர், 0110860700056866, 7527, 7547, 7548, 7551, 7558, 7561, 7562, 7583, 7592, 7629, 0110860730020336, 0505, 0506, 0517, 0522, 0550, சிங்காநல்லூர் கோயம்புத்தூர், 0127370700026231, 6279, 0127370730026415, 6416, 6512, 6541, 6543, 6554, சிவணந்தபுரம் சரவணம்பட்டி, 0112940700048213, 8369, 8410, 8413, 8416, 8441, 8454, 8470, 8481, 8483, 8513, 0112940730026162, 6206, 6243, 6244, 6277, 6278, 6283, 6284, 6288, 6296, 6346, 6352, 6355, 6357, 6362, 6365, 6379, 6400, 6416, 6421, சோமனூர் கோயம்புத்தூர், 0118300700033045, 3689, 3696, 3728, 0118300730040421, 0475, 0497, 0505, 0122, சுவரிபாளையம் கோயம்புத்தூர், 0111230700058426, 8436, 8456, 8460, 8461, 8488, 8493, 8495, 8503, 8508, 0111230730019321, 9516, 9531, 9552, 9554, சுந்தரபுரம், 0115470700052576, 2632, 2646, 3443, 3472, 3726, 3774, 3780, 3798, 3800, 3843, 3849, 3855, 3859, 3863, 0115470730015030, 7689, 7719, 7783, 7795, 7801, 7802, 7805, 7806, 7818, 7830, 7834, 7840, 7855, 7870, 7884, துடியலூர், 0114310700038659, 8748, 9596, 9826, 9844, 9861, 9885, 9890, 0114310730016424, 0531, 0762, 0881, 0882, 0888, 0889, 0899, 0905, 0925, 0927, 0962, 0963, 0981, திருப்பூர், 0100630700785837, 5908, 5949, 5986, 5992, 5996, 6024, 6025, 6039, 6053, 6072, 6075, 6077, 0100630730014125, 4127, 5695, 5696, 5726, 5734, 5735, 5736, 5738, 5760, 5767, 5773, 0201, திருப்பூர் பி என் ரோடு, 0103410700785595, 5600, 5603, 5837, 0103410730015897, 8118, 0225, உடுமலைப்பேட்டை பொள்ளாச்சி மெயின் ரோடு, 0101200700786269, 6271, 6293, 6328, 0101200730012251, 2257, 4678, 4721, 4722, 4863, 4866, 4868, 4877, 4878, 4903, 4921, வீரபாண்டிபிரிவு கோயம்புத்தூர், 0123620700040895, 0962, 1124, 1133, 1148, 1150, 1153, 1165, 1177, 1192, 1200, 1211, 1234, 0123620730020160, 0184, 0340, 0341, 0344, 0345, 0372, வெங்டராமண் தெரு பொள்ளாச்சி, 0115540700044613, 4696, 4833, 4845, 4854, 4865, 4884, 4914, 4918, 0115540730015804, 5805, 5867, 5886, 5887, 5895, 5898, ஈரோடு, அந்தியூர் ஈரோடு, 0114630700067690, 7724, 7744, 7761, 7763, 7765, 7837, 9432, 9450, 9451, 9459, 9460, 9483, 9493, 9498, 9501, 9502, 9521, 9541, 9542, 9546, 9550, 9556, 9560, 9575, 9583, 9587, 9588, 9594, 9596, 0114630730030184, 0186, 3294, 3801, 3803, 3808, 3809, 3815, 3816, 3819, 3820, 3822, 3823, 3843, 3844, 3845, 3851, 3852, 3865, 3867, 3877, 3882, 3895, 3896, 3899, 0282, அப்பக்குடல் ஈரோடு, 0118370700048898, 8997, 9013, 9